காலாண்டுச் செய்திமடல்

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

ஏப்ரல் 2006 மலர்-2 இதழ்-1

மேலும் தகவல்களுக்கு
www.ciks.org என்ற
இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## இயற்கை விளைபொருட்கள் விற்பனை - பிரச்சினைகளும், எதிர்கால வாய்ப்புகளும்



திரு. ராஜாராமன் இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ‘இயற்கை விளைபொருட்களை விற்பனை செய்வதில் உள்ள பிரச்சினைகளும், எதிர்கால வாய்ப்புகளும்’ என்ற தலைப்பில் ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் சென்னையிலுள்ள “தி கான்ஃபரன்ஸ் சென்டரில்” பிப்ரவரி 6ஆம் தேதியன்று கூட்டம் ஒன்றை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த சுமார் 38 பேர் கலந்து கொண்டார்கள். இதில், தமிழ்நாடு அரசின் சிவில் சப்ளைஸ் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் பொறுப்பாணையர், திரு. கே. ராஜாராமன், இ.ஆ.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், ஃபோர்ட் நிறுவனத்தின் திட்ட அலுவலர் திரு. வசந்த் சபர்வால் அவர்களும் கலந்து கொண்டார். மேலும், விவசாயிகள் இயற்கை வேளாண்மையை மேம்படுத்த உதவும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், இயற்கைவழி வேளாண் பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ள குழுக்கள் மற்றும் தனி நபர்கள், நுகர்வோர் குழுக்களின் பிரதிநிதிகள், நுகர்வோர் மற்றும் இயற்கைவழி வேளாண்மைச் சான்றளிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் என பல்வேறு நபர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், ‘நுகர்வோர்கள் தங்கள் உணவுப் பொருட்கள் எங்கிருந்து வருகிறது’ என்பதை கவனிக்க வேண்டும் என்றும் ‘இயற்கை விளைபொருட்களுக்கு கூடுதலாக விலை கொடுக்கத் தயங்கக்கூடாது’ எனவும் கருத்து தெரிவித்தனர். மேலும், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சில வியாபாரிகள், விநியோகத்தின்போது விளைபொருட்கள் வீணாவதைக் குறைக்க வேண்டும் எனக் கருதினர். மேலும் சிலர், பால், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளின் விற்பனையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர்.

## இயற்கைவழி நெல் சாகுபடி

(நான்கு படங்களின் தொகுப்பு)




மேலும் விவரங்களுக்கு பார்க்க பக்கம் 4

## அகக்கட்டுப்பாட்டு முறைமைப் பற்றிய பயிற்சி

அகக்கட்டுப்பாட்டு முறைமைப் பற்றிய பயிற்சி முகாம், பிப்ரவரி 24 மற்றும் 25ஆம் தேதிகளில் செங்கல்பட்டு களப்பணி அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இதில், இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சியை பெங்களூரில் உள்ள ஐஎம்ஓ (IMO) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. உமேஷ் சந்திரசேகர் அவர்களும், திரு. வாசுதேவா அவர்களும் நடத்தினார்கள். சிறு மற்றும் குறு விவசாய குழுக்களுக்கு இயற்கைவழி சான்று அளிப்பதற்காகப் பின்பற்றப்படும் அகக்கட்டுப்பாட்டு முறைமைப் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், அகக்கட்டுப்பாட்டு முறைமைப் பற்றிய குழு விவாதங்கள் நடத்தப்பட்டன. பண்ணையின் வரைபடங்கள் தயாரிக்கும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. பிப்ரவரி 23ஆம் தேதியன்று, திரு. உமேஷ் அவர்களும், திரு. வாசுதேவா அவர்களும் சுக்கன்கொல்லை பண்ணையையும், விவசாயிகளின் களங்களையும், விதை வங்கிகளையும் பார்வையிட்டனர். ஆவணங்களைப் பராமரிப்பது குறித்தும், இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களை நிறுவுவது குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார்கள்.



# ஆய்வுத் திட்டங்கள் - ஒரு பார்வை

### விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மை

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மை என்ற திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் எங்கள் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பட்டத்தில் சாகுபடி மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களும், பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆரோக்கியம் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து நெல் விதைகள் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு டாக்டர் அப்துல் ரசாக் அவர்கள் "பாரம்பரிய கால்நடை பராமரிப்பிற்குப் பயன்படும் மூலிகை மருந்துகள்" என்ற தலைப்பில் பயிற்சி அளித்தார். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ''லைவ்லிவுட் செக்யூரிட்டி'' (வாழ்க்கைக்கு உத்திரவாதம் அளித்தல்) என்ற தலைப்பில் 33 நிமிட வீடியோ படம் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை

புது தில்லியில் உள்ள கபார்ட் நிறுவனத்தின் உதவியுடன் 'உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மைத் திட்டத்தைக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் செயல்படுத்தி வருகிறோம். இந்த பத்து கிராமங்களிலும் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பதினாறு பாரம்பரிய நெல் ரகங்கள் விதை உற்பத்திக்காக விதைப்பு செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு நெல் விதைகள், உயிர் உரங்கள், வேப்பம் பிண்ணாக்கு போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. வளத்தோடு கிராமத்தைச் சேர்ந்த பயனீட்டாளர்கள் கொளத்தாஞ்சேரியிலுள்ள மாதிரி பண்ணைக்கும், தண்டரைப்புதுச்சேரியிலுள்ள மூலிகை பண்ணைக்கும், மாமல்லபுரத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். இடையூர், தண்டரைப்புதுச்சேரி கிராம விவசாயிகள் கொளத்தாஞ்சேரி மற்றும் சித்திரவாடியிலுள்ள இயற்கை வேளாண்மை வயல்களையும், சுக்கன்கொல்லை பண்ணையையும் பார்வையிட்டனர்.

### தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செயல்படுத்தி வருகிறது. ஆய்விற்காகப் படைப்புழுக்களும், அசுவுணிகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. மார்ச் 6ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் அறிவுடை நம்பி அவர்கள், பூச்சி வளர்ப்பு ஆய்வகத்திற்கு வந்திருந்தார். அவர், பூச்சி வளர்ப்பு முறைகள் பற்றி சில ஆலோசனைகளை வழங்கினார்.

### காய்கறிகளில் விருட்சாயுர்வேத பரிசோதனை

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் "காய்கறிகளுக்கான விருட்சாயுர்வேதம்'' என்ற திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இதன் ஒரு பகுதியாக இயற்கைவழி காய்கறிச் சாகுபடி பற்றிய ஆய்வுகள் அல்லிவிளாகம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்விற்காக அகணியில் மூன்று சென்ட் நிலப்பரப்பில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. அல்லிவிளாகம், ஆதமங்களம், நெம்மேலி மற்றும் பாகசாலை கிராமங்களைச் சேர்ந்த பத்து விவசாயிகள் 80 சென்ட் நிலப்பரப்பில் இயற்கை முறையில் காய்கறிச் சாகுபடி செய்து வருகின்றனர். தக்காளியிலும், கத்தரியிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிதாக வடிவமைக்கப்பட்ட புகைமூட்டக் கருவியைப் பயன்படுத்தி வெண்டை விதைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முதுகலை மாணவர்களின் உதவியுடன் காய்கறி வகைகளின் ரகங்களை ஆராய்ந்து முறைப்படுத்துவது பற்றி அண்ணாமலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் மணிவண்ணன் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

### நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் "நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை'' என்னும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி மற்றும் கிருஷ்ணாபுரம் கிராமங்களைச் சேர்ந்த பயனீட்டாளர்களுக்கு "இயற்கை வேளாண்மைத் தொழில்நுட்பங்கள்'' குறித்து இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பல்வேறு தாவரக் கரைசல்களைத் தயாரிப்பது குறித்து செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

### பூச்சிக்கட்டுப்பாட்டில் விலங்கினப் பொருட்களின் பயன்கள்

நெதர்லாந்திலுள்ள காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் ''பூச்சிக்கட்டுப்பாட்டில் விலங்கினப் பொருட்களின் பயன்கள்" என்ற திட்டத்தின் கீழ் வெண்டையில் பல ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. பசு மற்றும் எருதின் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பஞ்சகவ்யம் பயிர்களுக்கு தெளிக்கப்பட்டு, தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அகணியில் "நிழல் வலைக்கூடம்'' கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஐ.டி.இ.எ (IDEA) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ராமு மற்றும் திரு. சஞ்சய் அவர்களுக்கு, காய்கறிகள் மற்றும் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள் பற்றியும், தகவல் சேகரிக்கும் முறைகள் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது.

### காம்பாஸ் பல்கலைக்கழக வளர்ச்சி திட்டம்

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக காந்திகிராம வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, வேளாண் இளங்கலை மற்றும் பட்டயம் பயிலும் மாணவர்களுக்கும், விவசாயிகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் ''பாரம்பரிய அறிவியல்" குறித்து பயிற்சி அளிக்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. ஜனவரி 6 ஆம் தேதி, காந்திகிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

காம்பாஸ் திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளரான, திரு. பர்ட்டஸ் ஹேவர்கோர்ட் அவர்கள் மார்ச் மாதம் 13 - 17ஆம் தேதி வரை சென்னை வந்திருந்தார். அப்போது அவர், இந்தியப் பாரம்பரிய அறிவியல் முறைகளான பாரம்பரிய மருத்துவம், யோகாசனம், நெசவு மற்றும் இயற்கை சாயங்கள் தொடர்பாகப் பணிபுரியும் பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்றிருந்தார். மேலும், அவர் காம்பாஸ் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆய்வுப் பணிகள் பற்றியும் கேட்டறிந்தார். "ஆசியாவில் பாரம்பரிய அறிவியல் முறைகள்" என்ற தலைப்பில் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இதைப் பற்றி விவாதிப்பதற்காக மார்ச் 17ஆம் தேதியன்று சென்னையில் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் திரு. பர்ட்டஸ் அவர்களும், ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், பெங்களூரில் உள்ள எஃப்.ஆர்.எல்.எச்.டி. (FRLHT) நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பி.எம். உன்னிகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டனர்.

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

### உணவுப் பதப்படுத்துவதைக் கண்காணிக்கும் குழு

உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான வரைமுறைகளையும், செயல் திட்டங்களையும் வகுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு குழுவில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக, ஜனவரி 2 மற்றும் 19ஆம் தேதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் அவர் கலந்து கொண்டார்.

### ஆர்ய வைத்திய நிலையத்திற்குப் பயணம்

ஜனவரி 3 மற்றும் 4ஆம் தேதிகளில் கோட்டக்கல்லில் உள்ள ஆர்ய வைத்திய நிலையத்தினால் நிறுவப்பட்டுள்ள மூலிகை ஆராய்ச்சி மையத்திற்கு ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் சென்றிருந்தார். ஜனவரி 4ஆம் தேதியன்று, ''விருட்சாயுர்வேதம் : தாரவங்களுக்கான பாரம்பரிய அறிவியல்'' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இதில், ஆர்ய வைத்திய நிலையத்துடன் இணைந்து பணியாற்றும் ஆயுர்வேத மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர்.

### நிறுவனங்களுக்குப் பயணங்கள்

ஜனவரி 9 மற்றும் 10ஆம் தேதிகளில் கே. விஜயலட்சுமி சிறுதானிய ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள டெக்கான் டெவலப்மெண்ட் சொசைட்டி (Deccan Development Society) என்ற அமைப்பிற்குச் சென்றிருந்தார். மறுநாள் பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்திற்குச் சென்று திரு. உமேஷ் சந்திரசேகர் அவர்களைச் சந்தித்து பேசினார். மேலும், அவர், பெங்களூரில் உள்ள ஐசிசிஓஏ (ICCOA) மையத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் பணிகளைப் பற்றியும், அவர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகள் பற்றியும் பேசினார்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைக் கூட்டம்

தில்லியிலுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடமிருந்து நிதியுதவி பெறும் பல்வேறு அமைப்புகளின் கூட்டம் ஜனவரி 17 - 19ஆம் தேதி வரை டெஹராடூனில் நடைபெற்றது. இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தில் இருந்து சுபாஷிணி ஸ்ரீதர் இதில் கலந்து கொண்டு "விருட்சாயுர்வேத முறைகளில் காய்கறிச் சாகுபடி" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### 11ஆம் ஆண்டு விழா

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் தனது 11ஆம் ஆண்டு விழாவை ஜனவரி 23ஆம் தேதியன்று கொண்டாடியது. இந்த ஆண்டு மையத்தின் பணியாளர்கள் அனைவரும் ஏற்காடு சென்றிருந்தனர். அங்கு மையத்தின் வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டு பல்வேறு கருத்துகள் பெறப்பட்டன. மேலும், அவர்கள் ஏற்காட்டிலுள்ள சில இடங்களையும் சுற்றிப் பார்த்தனர்.

### யுஜிசி (UGC) புத்துணர்வு பயிற்சி முகாம்

பிப்ரவரி 1ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் யுஜிசி புத்துணர்வு பயிற்சி முகாமில், "இயற்கை வளங்களைப் பராமரிப்பதற்கான பாரம்பரிய முறைகள்" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

### இண்டோசர்ட்டில் (INDOCERT) நடைபெற்ற பயிற்சி

அகக்கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சிறு வேளாண் குழுக்களுக்கு சான்றளித்தல் தொடர்பான பயிற்சி முகாம் பிப்ரவரி 1 - 3ஆம் தேதி வரை கேரளாவிலுள்ள, இண்டோசர்ட் நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 34 நபர்கள் கலந்து கொண்டனர். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்திலிருந்து ரா. ஸ்ரீதேவி இதில் கலந்து கொண்டார். இதில் அகக்கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சான்றளிப்பதற்கான செயல் முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் இண்டோசர்ட் அலுவலகத்தையும், கொச்சினிலுள்ள வாசனைப் பொருட்கள் வாரியத்தையும், தொடுபுழா என்ற இடத்தில் அகக்கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்தியுள்ள பண்ணைகளையும் பார்வையிட்டனர்.

### வாரணாசி பயணம்

பிப்ரவரி 10ஆம் தேதியன்று, சுபாஷிணி ஸ்ரீதர் வாரணாசியிலுள்ள இந்தியக் காய்கறிகள் ஆராய்ச்சி மையத்திற்குச் சென்றிருந்தார். அங்குள்ள பாரம்பரிய காய்கறி ரகங்களைப் பற்றியும், இயற்கைவழி காய்கறிச் சாகுபடியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகளைப் பற்றியும் கேட்டறிந்தார். மேலும், பிப்ரவரி 14ஆம் தேதியன்று, தில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்திற்குச் சென்றார்.

### கொல்கத்தா பயணம்

பிப்ரவரி 13 மற்றும் 14ஆம் தேதிகளில் கே. விஜயலட்சுமி மற்றும் எஸ். ஆறுமுகசாமி கொல்கத்தாவிலுள்ள விவேகானந்தா உயிரிதொழில்நுட்ப மையத்தின் உயிர்உரம் தயாரிப்பகத்திற்குச் சென்றிருந்தனர். அந்த மையத்தில் உயிர்உரம் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்தும், அதை வேறு இடங்களில் செயல்முறைப்படுத்தும் வாய்ப்புகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

### கிராமப்புற தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கு

தமிழ்நாடு மற்றும் பாண்டிசேரியிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு பிப்ரவரி 24 மற்றும் 25ஆம் தேதிகளில் "கிராமப்புறத் தொழில்நுட்பங்கள்" என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்றை எ. எம். எம். முருகப்ப செட்டியார் ஆராய்ச்சி மையம் நடத்தியது. இந்தக் கருத்தரங்கின் துவக்க விழாவில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டு, சிறப்புரை ஆற்றினார். இந்தப் பயிலரங்கின் ஒரு பகுதியாக மார்ச் 18ஆம் தேதியன்று 30 பேர் கொண்ட குழு சுக்கன்கொல்லை பண்ணையைப் பார்வையிட்டது.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைக் கூட்டம்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் நிதியுதவி பெறும் பல்வேறு அமைப்புகளின் கூட்டம் மார்ச் 1 - 3ஆம் தேதி வரை புதுதில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையினால் உருவாக்கப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும், இந்தக் கூட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்ட கண்காட்சியை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் அமைச்சர் ஸ்ரீ கபில் சிபில் அவர்கள் துவக்கி வைத்தார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையிடமிருந்து அடிப்படை உதவி பெறும் குழுக்கள் மேற்கொள்ளும் பணிகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. இதில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டு இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் பணிகளைப் பற்றி விளக்கினார்.

### திருச்சியில் நடைபெற்ற கருத்தரங்கு

தாய்லாந்தில் உள்ள எர்த்நெட் (Earthnet) நிறுவனத்தினால் 2005 ஆம் ஆண்டு பாங்காக்கில் நடத்தப்பட்ட "நெல் - விதை முதல் அறுவடை வரை" என்ற கருத்தரங்கின் தொடர் செயல் கூட்டம் மார்ச் 1 முதல் 4 ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு திருச்சியிலுள்ள குடும்பம் (Kudumbam) என்ற தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கருத்தரங்கை எர்த்நெட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. மைகேல் காமன்ஸ் அவர்களும், திரு. வித்துன் பன்யகுல் அவர்களும் நடத்தினார்கள். பதினோறு பேர் பங்கு பெற்ற இந்தக் கருத்தரங்கில் அகக்கட்டுப்பாட்டு முறைமையான பண்ணையை மேற்பார்வையிடுதல், பண்ணைக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் தகவல்களைப் பதிவுச்செய்து பாதுகாத்தல் போன்ற விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இந்தக் கருத்தரங்கில் சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் பி. காளிதாஸ் கலந்து கொண்டனர். திரு. மைகேல் அவர்களும், திரு. வித்துன் அவர்களும் சுக்கன்கொல்லை பண்ணைக்கும், சென்னை தலைமை அலுவலகத்திற்கும் வந்திருந்தனர்.

### விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்

"விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்" தொடர்பான பயிற்சிக்கு, மார்ச் மாதம் 21 - 24ஆம் தேதி வரை வேலூர் மாவட்டத்திலுள்ள, ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தில், பாரம்பரிய விதை ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புத்தகங்கள் மற்றும் வீடியோ படங்கள்

## இயற்கைவழி நெல் சாகுபடி

இயற்கைவழி நெல் சாகுபடி என்னும் இந்த வீடியோ படம் விதை முதல் அறுவடை வரை, மண்வள மேம்பாடு, பூச்சிக்கட்டுப்பாடு, நோய்க்கட்டுப்பாடு என்று நான்கு பகுதிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் படங்களில் நெற்பயிரில் விதைப்பு செய்த நாள் முதல் அறுவடை செய்யும் நாள் வரை மேற்கொள்ள வேண்டிய பல்வேறு இயற்கைவழி தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்தக் குறுந்தகடுகள் டிவிடி மற்றும் விசிடி வடிவங்களில் கிடைக்கின்றன.

## இயற்கை வேளாண்மையில் தாவரக் கரைசல்கள்




இந்தப் புத்தகத்தில், இயற்கை வேளாண்மையில் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் தாவரக் கரைசல்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கரைசல்களைத் தயாரிக்கும் முறைகள் குறித்தும், பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளன.




## மண்வள மேம்பாடு

இந்தப் புத்தகத்தில் இயற்கை முறையில் மண் வளத்தை மேம்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புத்தகத்தில் மக்கு உரம் தயாரிக்கும் முறைகள், உயிர்உரம் மற்றும் பசுந்தாள் உரத்தின் பயன்பாடுகள், தாவர வளர்ச்சி ஊக்கிகள் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வீடியோ படம் மற்றும் புத்தகங்களைப் பெற விரும்புவோர் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தை 24471087 / 24475862 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது ciks@vsnl.com / info@ciks.org என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# வருகையாளர் பதிவேடு

- ஜனவரி 19ஆம் தேதியன்று, கலிபோர்னியாவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் விஜயா நாகராஜன் அவர்கள் வந்திருந்தார்.
- ஜனவரி 27ஆம் தேதியன்று, மும்பையிலுள்ள எகனாமிக் டைம்ஸ் பத்திரிகையின் விற்பனை பொறுப்பாசிரியர் திரு. விக்ரம் டாக்டர் அவர்கள் வந்திருந்தார்.
- பிப்ரவரி 8ஆம் தேதியன்று, நெதர்லாந்திலுள்ள காம்பாஸ் நிறுவனத்தின் ஆலோசனையாளர் செல்வி. சாரா வான் ஓட்டெர்லூ பட்லர் அவர்கள் வந்திருந்தார்.
- பிப்ரவரி 20ஆம் தேதியன்று, தமிழ்நாட்டில் பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரியிலிருந்து டாக்டர் செல்லதுரை அவர்களும், டாக்டர் சுப்பிரமணியம் அவர்களும் வந்திருந்தார்கள்.
- பிப்ரவரி 25ஆம் தேதியன்று, ஹைதராபாத்திலுள்ள கபார்ட் நிறுவனத்தின் தலைவர் திரு. எல். பி. சிங் அவர்களும், செல்வி. சர்மிளா அவர்களும் வந்திருந்தார்கள்.
- மார்ச் 1 ஆம் தேதியன்று, ஹைதராபாத்தில் இருந்து வேளாண்மை ஆலோசகர் திரு. கயூம் அவர்கள் வந்திருந்தார்.
- மார்ச் 7ஆம் தேதியன்று, பெங்களூரிலுள்ள கிராம மூலிகை கம்பெனியின் தலைமை இயக்குனர் திரு. ஜி. ராஜு அவர்கள் வந்திருந்தார்.
- மார்ச் 13ஆம் தேதியன்று, அமெரிக்காவிலுள்ள இன்பினிட்டி நிறுவனத்திலிருந்து திரு. ராஜீவ் மல்ஹோத்ரா அவர்களும், அந்தத் திட்டத்தின் இந்திய ஒருங்கிணைப்பாளரான செல்வி. ஸ்ருதி அவர்களும் வந்திருந்தார்கள்.

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & து. து. நிர்மலா தேவி, டாக்டர் கே. விஜயலட்சுமி,

வடிவமைப்பு : ஆர். டி. வினோத் குமார், ரா. ஆனந்த்

நூல்-அஞ்சல்

பெறுநர்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்
நடைமுறை வாழ்க்கைக்கு மரபு அறிவியல்

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114
மின்னஞ்சல் : ciks@vsnl.com இணையத்தளம் : www.ciks.org